1968 ஆகஸ்ட் 28]

திரு. என். எஸ்.வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை அலங்காநல்லூர் சர்க்கரை ஆலைத் தலைவருக்கு மதுரை நகரத்தில் சர்க்கரை மொத்த வினியோக லைசென்ஸ் கொடுத்திருப்பது உண்மையா? அதைப் பற்றிப் பொது மக்களிடமிருந்து புகார் வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இரண்டையும் பற்றி என்னிடம் தகவல் இல்லை.

திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர் சார், ஷுகர் வினியோகத்தில் சாதாரணமாக ஒரு பஞ்சாயத்தில் பல இடங்களில் இந்தக் கோட்டா முறை இல்லாததால், அந்தப் பகுதி மக்கள் 5, 6 மைல் தூரம் நடந்து போக வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அந்த விதமான சங்கடத்தைப் போக்க மாவட்ட வினியோக அதிகாரிக்கு அறிக்கை அனுப்பி இந்தக் குறையை நீக்க சர்க்கார் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : முயற்சி செய்யவேண்டியது மாவட்ட வினியோக அதிகாரியல்ல; மூட்டை கட்டி இவ்வளவு என்று மாதந்தோறும் வழங்குவது மத்திய சர்க்காரிடம் இருக்கிறது. இப் பொழுது 6,000 டன் தான் கிடைக்கிறது. முன்பு 10, 12 ஆயிரம் டன் என்று இருந்தது. பார்ஷியல் டிகண்ட்ரோல் காரணமாக 40 சத விகிதம் வெளிச் சந்தையில் விற்கலாம் என்று சொன்னவுடன் கன்யாகுமரி முதல் காசிமேடு வரையில், மில் அதிபர்கள் அதிகவிலையில் வினியோகம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதை இந்த அரசு எதிர்த்தது. இப்பவும் எதிர்க் கிறது. நாம் எவ்வளவு தூரம் வற்புறுத்தினாலும், 6,000 டன் தான் கொடுப்பதால் மாவட்டத்தின் விகிதாசாரப்படி கொடுக்கப்படுகிறது. சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும். சட்டியில் கிடையாது. ஆகவே அது சம்பந்தமாக மத்திய சர்க்காரோடு போராட திரு. மார்ட்டின் அவர் களும் முன் வரவேண்டும்.

மாதிரிப் பழத் தோட்டங்கள்

***168 வினா.—திரு. கே. ஆர். கோவிந்தன் :** மாண்புமிகு வேளாண் மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மாதிரிப் பழத் தோட்டம் ஏற்படுத்த அரசினரால் வழங்கப்படும் கடன் எவ்வளவு ? மானியம் எவ்வளவு ?

(இ) கொடுக்கப்படும் கடன் தொகையை எத்தனை ஆண்டுகளில் திருப்பிக் கட்ட வேண்டும் ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) & (இ) மாதிரிப் பழத் தோட்டங்கள், செடிப் பண்ணைகளை அரசாங்கம் மட்டுமே நிறுவுவதனால், தனிப்பட்டவர்களுக்குக் கடன் அல்லது உதவித் தொகை அளிக்கும் வினா எழுவதற்கு இடமில்லை.

Thiru K. S. KOTHANDARAMIAH : Will the Hon. Minister for Agriculture be pleased to state the number of model orchards in our State and also the conditions required to start new ones ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தமிழகத்தில், ஒன்பது மாதிரிப் பழத் தோட்டங்கள், ஆத்தூர் (செங்கல்பட்டு மாவட்டம்), அருங்குளம் (தஞ்சாவூர்), பெரியகுளம் (மதுரை), கொடைக்கானல் (மதுரை), குற்றாலம் (திருநெல்வேலி), திம்மாபுரம் (தர்மபுரி), குன்னூர் (நீலகிரி), பூவணி (ராமநாதபுரம்), கூழப்பட்டு (வட ஆற்காடு) முதலிய இடங்களில் இருக் கின்றன.

திரு கே. சகாதேவ கண்டர் : தலைவர் அவர்களே, மாதிரிப் பழத் தோட்டம் போட எவ்வளவு கடன்கள் வழங்கப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மாதிரிப் பழத் தோட்டங்களை அரசாங்கமே, வேளாண்மைத் துறை மூலம் நடத்தி வருகிறது. தனிப் பட்டவர்கள் நடத்துவது இல்லை. அவர்கள் நடத்துவது வேறு விஷயம்.

திரு. பி. வேலுசாமி : பழத்தோட்டங்களிலே ஜனங்களுடைய உபயோகத்திற்கு பழம் கிடைக்கும் அளவில் வந்திருக்கிறது எத்தனை எக்கர்கள், வெறுமனே இருப்பது எத்தனை எக்கர் என்பதைத் தெரிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : 1966–67-ல் 1,477 எக்கரிலேயும், 1967–68-லே 1,698 எக்கரிலேயும் பழத் தோட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன.

பவானி வட்டத்துக் காடுகளிலுள்ள தரிசு நிலங்கள்

*169 வினு.—**திரு. ஈ. எம். நடராசன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பவானி தாலுகாவில் தரிசாகக் கிடைக்கின்ற பாரஸ்ட் நிலங்கள் எவ்வளவு ?

(இ) அவற்றை நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு பட்டா செய்து கொடுக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) பவானி வட்டத்தில் உள்ள ஒதுக்கக் காடுகளில் தரிசு நிலம் எதுவுமில்லே.

(இ) நிலமற்ற ஏழை உழவர்களுக்குக் காட்டு நிலத்தை ஒப்படை செய்யும் செயற்குறிப்பு எதுவுமில்லே.

திரு. ஈ. எம். நடராசன் : சார், பவானி தாலுகாவில் ஃபாரஸ்ட் நிலங்களைத் தங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று ஏழை விவசாயிகள் மனுக்கள் அனுப்பியிருக்கிறுர்கள். நிலமற்றவர்களுக்கு அந்த நிலங்களைக் கொடுத்து உணவு உற்பத்தியைப் பெருக்க உதவி செய்ய சர்க்கார் முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அப்படிப்பட்ட விண்ணப்பம் வந்திருக்கிறது. அதைப் பற்றி அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. ரா. ராமச்சந்திரதுரை: தலைவர் அவர்களே, பொதுவாக ஃபாரஸ்ட் தரிசு நிலங்களில் பல பகுதிகளில் யூகலிப்டஸ் போடுகிறுர்கள். இன்னும் சில இடங்களில் சவுக்குப் போடுகிறுர்கள். எங்கள் பகுதியில் முந்திரி போட்டிருக்கிறுர்கள். அந்த அந்த கிராமங்களுக்கு அருகாமையில் உள்ள, கிராம மக்கள் கட்டுப்பாடாக இருந்து, 10,000 ரூ. பெறுமானமுள்ள வற்றை 1,000, 2,000 என்று எடுத்து விடுகிறுர்கள். அதனுல் அரசாங்கத்திற்குப் பணம் வீணுகிறது. தனிப்பட்ட ஒரு ஆள் அடித்துக்கொண்டு போய் விடுகிறுர். ஆகவே, அவற்றைப் பட்டா நிலமாகச் செய்து கொடுத்தால், உணவு உற்பத்திக்கும் வசதியாக இருக்கும். அதைச் செய்ய சர்க்கார் முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : யூகலிப்டஸ் செடியோ, முந்திரி செடியோ, காட்டிலாகாவினரே தான் நடுகிறுர்களேயல்லாது, தனிப்பட்டவர்களுக்கு அனுமதி கொடுப்பதில்லே. அங்கத்தினர் சொல்வது போல, பட்டா செய்து கொடுக்கக்கூடிய திட்டம் அரசாங்கத்திடம் இல்லே. ஏற்கெனவே நிலம் இருக்கிறவர்களுக்கு மேலும் அரசாங்கத்தின் சொத்தைப் பயன்படுத்திக்கொள்ள அரசாங்கம் இடம் கொடுக்காது.

திரு. கே. பி. எஸ். மணி : தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாநிலத்திலும் காட்டு நிலங்கள் இவ்வளவு இருக்க வேண்டும் என்று காட்டு இலாகா ஏதாவது வரையறை செய்திருக்கிறதா ? அப்படி வரையறை இருந்தால், நம்முடைய காட்டு இலாகா நிர்வாகத்தில் எவ்வளவு நிலம் இருக்கவேண்டுமென்று அரசு வரையறை செய்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஒரு நாட்டின் மொத்த நிலப் பரப்பில் மூன்றில் ஒரு பகுதி காட்டு நிலமாக இருக்கவேண்டும். துரதிருஷ்டவசமாக மொழிவழி மாநிலம் அமைந்த காரணத்தால், காடுகள்